**கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2012**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 1.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

முன்னைய ஆண்டிற்கான என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டவாறு, வேறு தொடர்புபட்ட நிறுவனங்களால் பேணப்பட்ட நேரொத்த பதிவேடுகள் மூலம் வழங்கப்பட்ட தகவல்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைகளை இணக்கம் செய்வதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஆகவே,

நிதிக்கூற்றுக்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 118.76 மில்லியன் தொகையான வெளிநாட்டு வளங்களிலிருந்து பெறப்பட்ட பெறுகைகள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 101.28 மில்லியன் பெறுகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 23 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1.19 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரங்களை பதிவதற்கு செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிப்பிரமாணம் 756 இல் வேண்டப்பட்டவாறு அத்தகைய சொத்துக்களின் பௌதீக தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், தேநிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வழமைபோல, அரச கொள்வனவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பந்தி, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பெறுமதி சேரி வரி கொடுப்பனவுகள் மீதான மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு காலப்பகுதியின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட மொத்த பெறுமதி சேர் வரிகள் ரூபா 8.3 மில்லியனாக இருந்தது.

## 2. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 2.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2012 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஜசீஏ | 14,087 | 17,922 | 1,400 | 62.10 | 99.4 | 76.10 | 118.8 |
| இலங்கை அரசாங்கம் | 3,191 | 4,060 | 350 | 40.75 | 65.2 | 63.26 | 96.4 |
| மொத்தம் | 17,278 | 21,982 | 1,750 | 102.85 | 164.6 | 139.36 | 215.2 |

2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,750 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்டவற்றின் 9.4 சதவீதத்திற்கு சமமான ரூபா 164.6 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், முழுச் செயற்திட்ட காலப்பகுதியை மேவுகின்ற பொறுப்புக்களை நிர்ணயிப்பதுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டி பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைதலை உறுதிப்படுத்துவதற்கு விரிவான திட்டமின்மையால் செயற்திட்டமானது குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு உபாமொன்றிருந்ததென்பது ஐய்யற்திற்கிடமாகவே உள்ளது.

## 2.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 2.69 சதவீதம் மற்றும் 3.53 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு நடைமுறைகளிலுள்ள தாமதந்தால் செயற்திட்டத்தால் அமுலாக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் 91.4 சதவீதமாகவிருந்த நான்கு பிரதான பொதிகளின் கீழ் செய்யப்பட்ட நிர்மாணங்களின் பௌதீக முன்னேற்றம் எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை.

**2.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வாறான மேந்தலைக் கட்டணங்கள் ரூபா 3.7 மில்லியனாகும்.